ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | டிசம்பர் 1999 | கானம் : 5

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 5 டிசம்பர் 1999 கானம் : 5

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 49 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 31 | 8 |
| 5. | பாலகர்களுக்கு ஒரு கதை - 25 | 10 |
| 6. | விஷ்ணுமாயை | 11 |
| 7. | சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா | 15 |
| 8. | எந்தரோ மஹானுபாவுலு - 19 | 19 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 52 | 22 |
| 10. | செய்திகள் | 31 |
| 11. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



மதுரபுரி ஆஶ்ரமத்தில் வேத பாடசாலை வித்யார்த்திகளுடன் ஸ்ரீ ஸ்வாமிகள்

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : நாதநாமக்ரியை தாளம் : ஆதி

## பல்லவி

வாஸுதேவ ! வாஸுதேவ ! வாஸுதேவ ! பாஹி மாம்
வாஸுதேவ ! வாஸுதேவ ! வாஸுதேவ ! ரக்ஷ மாம்

## சரணங்கள்

வைகுண்டநிலய வாஸுதேவ !
வைஜயந்தீதர வாஸுதேவ !
வைநதேயவாஹன வாஸுதேவ !
வைதேஹீரமண வாஸுதேவ ! (வாஸுதேவ)

கஸ்தூரீதிலக வாஸுதேவ !
கல்ஹாரமால வாஸுதேவ !
கனகாம்பரதர வாஸுதேவ !
கங்கணபூஷண வாஸுதேவ ! (வாஸுதேவ)

ஶங்கசக்ரதர வாஸுதேவ !
ஶரணாகதவத்ஸல வாஸுதேவ !
ஶ்ருங்காரலோல வாஸுதேவ !
ஸ்த்யகாம வாஸுதேவ ! (வாஸுதேவ)

ஜகதோத்தாரக வாஸுதேவ !
ஜஞ்ஜல நூபுரதர வாஸுதேவ !
ஜலஜதர வாஸுதேவ !
ஜயமுரளீதர வாஸுதேவ ! (வாஸுதேவ)

## மதுரமான ஞானியர் 49

ஸமீபத்தில், நம் ஸ்வாமிகள் பெங்களூர் சென்றிருந்தார்கள். அங்கிருந்து காரில் திரும்பி வருகையில், ஆண்டவன்பிச்சை என்ற ஒரு மஹா பக்தையின் சரித்ரத்தை படித்து கொண்டு வந்தார்கள். அந்த பக்தையின் சரித்ரம் மிகவும் உருக்கமாகவும் விசித்ரமாகவும் இருந்தது.

கள்ளிடைகுறிச்சியில் அவதரித்த ராமக்ருஷ்ணர் (பின்னவாசல் பெரியவர்) என்ற மஹாத்மா, ஸம்ஸ்க்ருதத்தில் மிகவும் பாண்டித்யம் உடையவர். க்ருஹஸ்தாஸ்ரமத்தில் இருந்தபோதிலும் மிகவும் வைராக்யமுடையவராக வாழ்ந்து வந்தார். பல ஊர்களிலும் ஸஞ்சாரம் செய்து வந்த அவர் ஆவுடையார் கோவிலிலும், நெரூர் ஸதாஶிவ ப்ரஹ்மேந்த்ராள் அதிஷ்டானத்திலும் பல வருடங்கள் தவம் இயற்றியுள்ளார். நெரூர் ஸதாஶிவ ப்ரஹ்மேந்த்ராள் அவர்களே இவருக்கு யோக தசையில் குரு. பல ஸமயங்களில் ப்ரஹ்மேந்த்ராள் இவருக்கு ப்ரத்யக்ஷமாகியுள்ளார்.

ஆவுடையார் கோவிலில் யோகாம்பிகை ஸந்நதியில் சுமார் 12 வருடங்கள் தேவியின் நவாக்ஷரி மந்த்ரத்தை ஏக பாதாஸனத்தில் (ஒரு காலில் நின்று) தபஸ் செய்துள்ளார். ஒரு ஸமயம், யாத்ரையாக இவர் ரிஷிகேஷ் செல்கையில் அங்கு ஸ்வாமி சிவானந்தரை தர்சனம் செய்தார். அவரிடம் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள ஆசைப்பட்டார். ஏதோ ஒரு காரணத்தினால் அது நிறைவேறவில்லை. பிறகு திருச்சிராப்பள்ளிக்கு ஸமீபத்தில் உள்ள லால்குடியின் அருகிலிருக்கும் பின்னவாசல் என்ற கிராமத்தில் தங்கி அந்த கிராமத்திலேயே மார்கழி மாதம் ஶுக்லபக்ஷம் த்வாதஶீ திதியில், 1944-ஆம் வருடம் ஸித்தியடைந்தார்.

அவருடைய ஜீவித காலத்திலேயே அவருக்கு பல விதமான ஸித்திகள் கைகூடி இருந்தன. அவருக்கு காரைக்குடி உள்பட பல ஊர்களிலும் பல தனவந்தர்கள் சிஷ்யர்களாக இருந்தார்கள். அவர் ஸித்தியடைவதற்கு இருபத்தியொரு நாட்களுக்கு முன்பாக ஆபத் ஸந்யாஸம் வாங்கிக்கொண்டார். அவர் எப்பொழுதும், குடும்பத்தைப் பற்றி சிந்தனை செய்யாமல் தவ வாழ்க்கையில் ஈடுபட்டு வந்ததால் மஹா பதிவ்ரதையான அவருடைய பத்னீ, ''தாங்கள் ஒரு ஜென்மமாவது ஸ்த்ரீயாய் பிறந்தால்தான் ஸ்த்ரீகளுக்கு உள்ள ஶ்ரமம் தெரியும்'' என்று கூறிவிட்டார். அவர் ஸித்தியாகும் ஸமயத்தில் ப்ரத்யக்ஷமான அவருடைய குரு,

''உன்னுடைய பத்னீ மஹாபதிவ்ரதையாக இருப்பதால், அவருடைய வாக்கை ஸத்யம் செய்ய அவஶ்யம் நீ ஒரு ஸ்த்ரீ ஜென்மம் எடுக்க வேண்டும்'' என்று கூறிவிட்டார். அதன்படி ஸ்வாமிகள், தன்னை ஸமாதியில் வைக்கும்பொழுது, தன்னுடைய கண்களை திறந்து வைக்கும் படியும், ஸமாதியில் ஒரு த்வாரம் வைக்கும்படியும் கூறியிருந்தார்.

ஸ்வாமிகளுக்கு மீண்டும் கர்ப்பவாஸம் செய்ய விரும்பவில்லை. அதே ஸமயம், குருவினுடைய வாக்கை ஸத்யம் செய்யவேண்டிய அவஶ்யமும் அவருக்கு இருந்தது. அதனால், யோகத்தில் தன்னுடைய ஶரீரத்திலிருந்து ஆண்டவன்பிச்சை ஶரீரத்திற்கு கூடுவிட்டு கூடு பாய்ந்தார்.

காஞ்சி மஹாபெரியவாளை ஆண்டவன்பிச்சை தர்ஶனம் செய்தபொழுது, மஹாபெரியவாள் அவரைப் பார்த்து, ''இதுமாதிரி கூடுவிட்டு கூடு பாய்தல் என்பது விக்ரமாதித்தன், ஆதிஶங்கரர், அருணகிரிநாதர், திருமூலர் போன்ற மஹான்களுடைய சரித்ரங்களில்தான் நடந்துள்ளது. அதற்குப் பிறகு பின்னவாசல் பெரியவருடைய சரித்ரத்தில்தான் நடந்துள்ளது என்று கூறி அதிஶயித்தார்கள். மேலும் ஆண்டவன்பிச்சை, ரிஷிகேஷ் யாத்திரை சென்றபொழுது சிவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள், அவர்களுடைய விஷயங்களை புரிந்துகொண்டு முன்பு ஏதோ ஒரு காரணத்தினால் நின்றுபோன ஸந்யாஸ ஆஶ்ரமத்தையும் கொடுத்து பூர்த்தி செய்தார்கள்.

பெங்களூரிலிருந்து வரும்பொழுது நம் ஸ்வாமிகள், ஆண்டவன் பிச்சையின் சுய சரித்ரத்தைப் படித்து வந்த புத்தகத்தை அந்த Tourist காரிலேயே மறந்து வைத்துவிட்டார். மேலும், அவர்களுடைய சரித்ரத்தை தெரிந்துகொள்ள ஆர்வம் கொண்ட ஸ்வாமிகள், அவர்களைப் பற்றி தெரிந்துகொள்ள பலரிடமும் விசாரித்துப் பார்த்தார்கள். ஆனால் ஒருவருக்கும் விஷயம் தெரியவில்லை. ஆனால், கோகுலாஷ்டமி உத்ஸவத்தின்பொழுது நம்முடைய ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த ஸரஸ்வதி அவர்களின் தாயார் யதேச்சையாக ஆண்டவன்பிச்சையின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு அவர்கள் ஸம்பந்தமான மேலும் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்.

ஸமீபத்தில் திருச்சி சென்ற ஸ்வாமிகள் பின்னவாசல் சென்று அந்த அதிஷ்டானத்தையும் தர்சனம் செய்து வந்தார்கள்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

கேள்வி : தாங்கள் ஒரு உத்ஸவத்திற்கு வருவதாக இருந்தது. ஆகவே நான் அங்கு சென்றிருந்தேன். ஆனால், தாங்கள் வரவில்லை. காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?

பதில் : ராஜஸமான உத்ஸவங்களில் நான் கலந்து கொள்வதில்லை. உத்ஸவம் நிற்காமல் நடக்கவேண்டும் என்பதற்காக வசூல் செய்வதில் தவறில்லை. ஆனால் பலர் வசூலிற்காகவே உத்ஸவம் நடத்துகின்றார்கள். இது போன்ற உத்ஸவங்களில் நான் கலந்து கொள்வதில்லை.

கேள்வி : தாங்கள் நாம ஸங்கீர்த்தனம் எல்லோரும் செய்யவேண்டும் என்று ஏழை ஜனங்கள் வரை ப்ரச்சாரம் செய்கின்றீர்கள். அதைவிட அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யலாமே?

பதில் : ஏழை ஜனங்களும், அரசியல் அமைப்புகளும், ஸமூக சேவை நிறுவனங்களும், பல வெளிநாட்டு ஸ்தாபனங்களும், பல விதங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களையும், ஏழை ஜனங்களை சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்ற பாடுபட்டு வருகின்றன. ஆகவே நானும் அதே காரியத்தை செய்யாமல் அவர்களை ஆன்மீக ரீதியாக முன்னேற்ற ஆசைப்படுகின்றேன். அவர்களுக்கு ஆத்மபலம் ஏற்பட வேண்டும். ஆன்மபலத்தினால்தான் ஒருவன் தூய்மையானவனாவன்.

கேள்வி : நான் ஒரு வேத அத்யயனம் செய்தவரை சந்தித்தேன். அவரிடம் காமம், க்ரோதம், பொய், எல்லாம் இருக்கின்றது. அவரை விட நான் மேல் இல்லையா?

பதில் : உங்களிடமும் காமம், க்ரோதம், அஸத்யம் எல்லாம் இருக்கின்றது. ஆனால் வேதஅத்யயன ஸம்பத்து உங்களிடம் இல்லையே. அது அவரிடம் இருக்கின்றது. ஆகவே அவரே பெரியவர்!

கேள்வி : எனக்கு தெரிந்த ஸ்வாமிகள் என்னை அவரிடம் அடிக்கடி வரச்சொல்கின்றார். அவரை குருவாக ஏற்றுக் கொள்ளும்படி நிர்பந்திக்கிறார். ஆனால் எனக்கு அதில் இஷ்டம் இல்லை. நான் என்ன செய்வது?

பதில் : கண்டவரையும் குருவாக ஏற்றுக் கொள்ளக்கூடாது. சிஷ்யர்கள்தான் உத்தம குருவை தேடிவந்தார்கள். ஆனால் இன்று

குருமார்கள் சிஷ்யர்களை தேடுகின்றார்கள். அதனால்தான் எல்லா விபரீதமே.

கேள்வி : வேதத்திற்கு நான் ஏதாவது செய்ய ஆசைப்படுகின்றேன். நான் என்ன செய்யலாம்?

பதில் : வேதம்தான் தெய்வம். வேதம்தான் தர்மம். வேதம்தான் ஸர்வம் என்று மேடையில் பேசுகிறவர்கள் எவரும் தன்னுடைய குழந்தையை வேத அத்யயனம் செய்ய விடுவதில்லை. தன்னுடைய பெண்ணை அத்யயனம் செய்த பையனுக்கு விவாஹம் செய்து தர முன்வருவதில்லை. வேத ஸம்ரக்ஷணத்திற்கு பணமாவது கொடுக்க முன்வந்தால்தான் வேதத்தை நாம் காப்பாற்றமுடியும்.

கேள்வி : நான் என்னுடைய குருவைத் தவிர யாரையும் வணங்குவதில்லை. அவரைத் தவிர வேறு எவருக்கும் தொண்டு செய்வதில்லை. இதை சிலர் தவறு என்கின்றார்கள். நான் செய்வது சரியா?

பதில் : உத்தமமான ஞானிக்கு செய்யும் தொண்டும் ஸமர்ப்பணமும் உலகத்தில் உள்ள எல்லா ஸாதுக்களுக்கும் செய்வதற்கு ஸமமே ஆகும்.

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாமஸங்கீர்த்தன இளைஞர் குழு ஒவ்வொரு வீடாகச் சென்று ‘‘ஹரி நாமஸங்கீர்த்தனம்’’ செய்ய சித்தமாக உள்ளது.

‘‘ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே’’

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரம் ஜபிக்கப்படும்.

இந்த நாமஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ‘‘நாம ஸங்கீர்த்தனம்’’ என்று எழுதி மிஷன் முகவரிக்கு அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

# வேத கதைகள் - 31

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி

ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## மந்திரங்களை கண்டு பிடித்தல்

அநாதியான வேத மந்த்ரங்கள், ஆகாயத்தில் ஶப்த அலைகளாக எங்கும் பரவிக் கிடக்கின்றன. மஹரிஷிகள் பரம அருளால் அந்த வேத ஶப்தங்களை தங்கள் காதால் கேட்டு அறிந்து நமக்கு அளித்திருக்கிறார்கள். லௌகீக ஶப்தங்களோ, வைதீக ஶப்தங்களோ எல்லாமே ஆகாயத்தில் பரவி இருக்கின்றன. லௌகீக ஶப்தங்கள் ஆகாயத்தில் குறிப்பிட்ட தூரம்தான் செல்கின்றன. அதற்கு மேல் செல்வதற்கு லௌகீக ஶப்தங்களுக்கு சக்தி இல்லை. வைதீக ஸப்தங்களோ எங்கும் எப்பொழுதும் செல்வதற்கு சக்தி பெற்றவை என்று விஜ்ஞானத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆகாயத்தில் உள்ள ஶப்தங்களை க்ரஹிப்பதற்கு ஏரியல் என்ற கருவிக்கு தகுதி இருக்கிறது. ஏரியல் ஶப்தங்களை கிரகித்து, ரேடியோ பெட்டி நமக்கு வெளியிடுகின்றது. அந்த காலத்தில் மஹரிஷிகளின் காதே ஏரியலாக இருந்திருக்கின்றது. ஆதலால்தான் அவர்கள் காதிற்கு திவ்ய ஸ்தோத்ரம் என்று பெயர் ஏற்பட்டது. தவத்தின் வலிமையால் அவர்களுக்கு எந்த ஶப்தத்தையும் கேட்கமுடிந்தது. இதைப் போல் திவ்ய த்ருஷ்டியால் உட்கார்ந்த இடத்திலேயே யாவற்றையும் பார்க்க முடிந்தது.

யுகாந்தே அந்தர்ஹிதான் வேதான் ஸேதிஹாஸான் மஹர்ஷய: ।
லேபிரே தபஸா பூர்வம் அனுஜ்ஞாதா: ஸ்வயம்புவன் ॥

என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இவ்விதம் பல மந்த்ரங்களை ஒரு ரிஷி கண்டுபிடித்திருக்கிறார். சில ரிஷிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மந்திரத்தை கண்டு பிடித்திருக்கின்றனர். மஹரிஷிகள் இவ்விதம் நமக்கு உபகாரம் செய்திருக்கின்றனர். ஆனால் யஜுர் வேதத்தின்

"இந்த்ர க்ரதுன்ன ஆபர ।"

என்ற மந்த்ரத்தில் முன் பகுதியை ஶக்தி என்கிற முனிவரும் பின் பகுதியை வஸிஷ்ட முனிவரும் கண்டுபிடித்ததாக ஶதபதப்ராஹ்மணம் கூறியுள்ளது. அதன் வரலாறு :-

ப்ரஸித்தி பெற்ற வஸிஷ்டருக்கு சக்தி வாய்ந்த ஶக்தி என்ற பிள்ளை பிறந்தார். பண்டைய காலங்களில் இந்த பூமிக்காக அப்பொழுது ஆண்டுவந்த அரசர்கள் ஒருவருக்கொருவர் விரோத மனப்பான்மையுடன் போர்புரிந்து வந்தனர். இதனால் நாட்டிற்கு அழிவும், இழப்பும்தான் ஏற்பட்டது. இதனால் வருத்தமடைந்த ஶக்தி முனிவர் அரசர்களுக்குள்ள விரோதத்தை ஒழித்து ஸமாதானத்தை நிலைநாட்ட முயன்றார். இவர் வழியை பின்பற்றிதான் ஔவைப்ராட்டியும் ஸமாதானத்தை நிலை நாட்டி வந்தார்.

இது சிலருக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆனால் பிறர் நாட்டை கவர்ந்து தன் ராஜ்யத்தை விரிவாக்கவேண்டும் என்ற எண்ணமுள்ள அரசர்களுக்கு ஶக்தி முனிவரின் போக்கு பிடிக்கவில்லை. அந்த அரசர்கள் ஶக்தி முனிவரின் அருகில் வந்து, அரசியலில் தாங்கள் ஈடுபடவேண்டாம் என்று வலியுறுத்தினர். அதை ஶக்தி முனிவர் கேட்கவில்லை. அதனால் கோபம் கொண்ட தீய எண்ணம் கொண்ட அரசர்கள், வஸிஷ்டர் இல்லாதபொழுது ஶக்தி முனிவர் தன் தவத்தின் பெருமையால் மந்த்ரங்களை கண்டுபிடிக்கும் ஸமயத்தில் அந்த துஷ்ட அரசர்கள் ஶக்தி முனிவரை கொன்றுவிட்டனர். விவரமறிந்த வஸிஷ்டர் ஓடோடி வந்து புத்ர சோகத்தினால் வருந்தினார்.

பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து துஷ்ட அரசர்கள் என் பிள்ளையைக் கொன்றபொழுது, என் பிள்ளை என்ன செய்து கொண்டிருந்தான்? என்று கேட்டார். அவர்களும்,

''இந்த்ர க்ருதுன்ன ஆபர।''

என்ற மந்திரத்தின் முன் பகுதியை கண்டு பிடித்துக் கொண்டிருந்தார் என்றனர். உடன் வஸிஷ்டர் வருந்தியவராக, அந்த மந்திரத்தின் பின் பகுதியை தான் கண்டுபிடித்தார். ''இந்த பின் பகுதியையும் ஶக்தியே கண்டு பிடித்திருந்தால் அவரை யாரும் கொன்றிருக்கமுடியாது. அந்த மந்த்ரம் மிகவும் சக்தி வாய்ந்தது. இந்த பின் பகுதியை கண்டுபிடிப்பதற்குள் ஶக்தி முனிவரை துஷ்டர்கள் அழித்து விட்டார்களே'' என்று வஸிஷ்டர் புலம்பி பின் ஸமாதானமடைந்தார்.

இந்த கதையால் மஹரிஷிகள் மந்த்ரங்களை எவ்வளவு கஷ்டப்பட்டு கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற விஷயமும், மந்த்ரங்களுக்கு எவ்வளவு சக்தி இருந்தது என்ற விஷயமும் நமக்கு நன்கு விளங்குகின்றன. ■

# பாலகர்களுக்கு ஒரு கதை - 25

- ஸ்ரீ ஸ்வாமிகள்

ஒரு ஸமயம், ஒரு மாதுஸ்ரீ மிகவும் ப்ரியமுடன் ஒரு நாய்க்குட்டியை வளர்த்து வந்தார். ஒரு ஸமயம், அந்த நாய்க்குட்டியின் வாலின் நுனியில் ஒரு சிறிய காயம் ஏற்பட்டது. அதற்கு எவ்வளவு செலவு செய்து வைத்யம் பார்த்தும் காயம் சரியாகவில்லை. வைத்யம் செய்து வந்த டாக்டரோ இந்த காயம் எப்படியும் சரியாகப் போவதில்லை. இதை இப்படியே விட்டால் வால் முழுவதும் பாதித்து, உடம்பிற்கும் இந்த காயத்தினால் ஆபத்து ஏற்பட நேரிடும். ஆகவே இந்த நாயின் வாலை வெட்டி எடுத்துவிடலாம் என்று கூறினார்.

ஆனால் அந்த மாதுவோ, வால் இல்லாவிட்டால் என்னுடைய நாய் மிகவும் கஷ்டப்படும். ஆகவே காயம் உள்ள நுனியைமட்டும் வெட்டி எடுத்துவிடுங்கள் என்று கூறினார். பிறகு வெட்டிய இடம் காயமாக ஆகிவிட்டதால் மீண்டும் சிறிது தூரம் வாலை வெட்டினார். பிறகு அந்த இடமும் காயம் ஆகிவிட பிறகு சிறிது தூரம் வெட்டினார். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி வால் முழுவதும் புண் ஆகி கடைசியாக வாலையே எடுக்கும்படி ஆகிவிட்டது. நாயும் வேதனை தாங்காமல் இறந்துவிட்டது.

மாதுஸ்ரீயும் தன்னுடைய ப்ரியமான நாய் இறந்துவிட்டதால் மிகவும் துக்கத்தை அடைந்தாள்.

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனின், ''நம்மிடம் ஏதாவது தீய பழக்கம் இருக்கும், ஆனால் அதை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தால், அது முடியாது. மனோபலத்துடன் அந்த தீய பழக்கத்திலிருந்து தீர புருஷனாக ஒரே நாளில் வெளியே வர வேண்டும்!'' என்பதாகும்.

To know more about mission activities and satsang events visit : http://members.tripod.com~madhuramurali

The Spiritual Magazine “Madhura Murali” is also available on Web : www.madhramurali.org/mmtamil

# விஷ்ணுமாயை

- ஸ்ரீ ஸ்வாமிகள்

நாஸ்திகர்களாக இருப்பவர்கள் திடும் என்று பக்தர்களாக மாறுவதும், பக்தர்களாக காணப்படுபவர்கள் திடும் என்று நாஸ்திகர்களாக மாறுவதும் உலகத்தில் இயற்கை. சிலரை நாஸ்திகர்களா? பக்தர்களா? என்றே தெரிந்து கொள்ளமுடியாது. ராமாயணத்தில் ராமன் மேல் உள்ள ப்ரேமையால், ஜாபாலி என்ற மஹரிஷியே நாஸ்திகம் பேச ஆரம்பித்தார். சிலருக்கு தங்களை பக்தர்களாக காட்டிக் கொள்வதில் ஆனந்தம். சிலருக்கு தங்களை நாஸ்திகர்களாக சொல்லிக்கொள்வதில் ஆனந்தம். சிலருக்கு ஆளுக்கு தகுந்தாற்போல் பேசுவதில் ஆனந்தம்.

மீராவுடைய சரித்திரத்தில், அவளுடைய பக்திக்காக ஆசைப்பட்டு கல்யாணம் செய்து கொண்ட மீராவின் கணவன் ராணாகும்பா, பிற்காலத்தில் மீராவை கொலை செய்யும் அளவிற்கு செல்வதை பார்க்கிறோம். குணங்கள் யாரிடமும் ஸ்திரமாக இருப்பதில்லை. இது உலக மனிதர்களிடையே ஸஹஜம்.

ஸ்ரீமத் பாகவதத்தில் பகவானுடைய தர்சனத்திற்காக ஆசைப்படும் அக்ரூரர், மதுராவிலிருந்து கிளம்பி ப்ருந்தாவனம் வந்து பகவானை மதுராவிற்கு திரும்ப அழைத்துச் செல்கிறார். மதுரா செல்லும் வழியில் பகவானும் அவருக்கு தன்னுடைய நிஜஸ்வரூபத்தை காட்டுகிறான். இப்படி பகவத் தர்சனம் செய்த அதே அக்ரூரருக்குப் பகவானிடத்தில் மனஸ்தாபம் வந்துவிடுவதை பாகவதத்தின் பிற்பகுதியில் பார்க்கிறோம்.

உலகத்திலேயே உத்தம புருஷன் என்றால் அனைவரும் ஸாக்ஷாத் ப்ரும்மாவையே சொல்கின்றனர். சரித்திரத்தில் எந்தவிதமான தோஷமும் இல்லாத ஆதிகாரிக புருஷர் ப்ரும்மா. ஸ்ரீமத் பாகவதத்தில், பூபாரம் அதிகமானவுடன் பூமாதேவி ஒரு பசு ரூபம் அடைந்து ப்ரும்மாவை ஶரணடைகிறாள். ப்ரும்மாவும் பூமாதேவியுடனும், தேவர்களுடனும் பாற்கடலில் உள்ள பகவானை ஶரணடைகிறார். பகவான் அவதாரம் செய்ய வேண்டிய அவஶ்யத்தைக் கூறி ப்ரார்த்திக்கிறார் ப்ரும்மா.

பகவானும் ப்ரும்மாவிடம்தான், வஸுதேவருடைய க்ருஹத்தில் தான் அவதரிக்கப் போவதாக சொல்கிறார். அந்த ப்ரேரணையை கேட்டு ஆனந்தம் அடைந்த ப்ரும்மா, தேவர்களிடம் பகவான் அவதரிக்கப்



போவதை தெரிவித்து, அவருக்கு கைங்கர்யம் செய்ய ஆசைப்படுபவர்கள் எல்லாரும் ஸ்த்ரீகளாக பூமியில் போய் பிறக்கலாம் என்று தெரிவிக்கிறார்.

ஸுத்த ஜீவனான ப்ரும்மாதான் பகவானை அவதாரம் செய்ய ப்ரார்த்திக்கிறார். பகவானும் தன்னுடைய அவதார விஷயத்தை ப்ரும்மாவிடம்தான் தெரிவிக்கிறார். ப்ரும்மாதான் தேவர்களுக்கு தெரிவிக்கிறார். இப்படிப்பட்ட ப்ரும்மாவே, பாகவதத்தின் பிற்பகுதியில், பகவான் மதுராவில் அவதாரம் செய்து ப்ருந்தாவனத்தில் மாடு மேய்த்து வரும் காலத்தில், பசுமாடு கன்றுகுட்டிகளையெல்லாம் ஓட்டிச் சென்று விடுகிறார். பகவானே தன்னிடம் வந்து அவைகளை திருப்பித்தருமாறு கேட்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். பகவானோ, தானே பசுமாடு, கன்றுகள், மேய்க்கும் கோபர்கள் எல்லாமாக ஆனதைப் பார்த்து பிறகு தானே பகவானிடம் வந்து ஶரணாகதி செய்து, தான் செய்த அபராதங்களுக்கு வருந்தி மன்னிப்பு கேட்டுக் கொள்கிறார். ஆனால் பகவானோ அவருடன் ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

பகவானுடைய மாயையில், ஸுத்த ஜீவனான ஆதிகாரிக புருஷனான ப்ரும்மாவின் நிலையே இப்படி என்றால் ஸாமான்ய ஜனங்களின் நிலையை சொல்லத்தான் முடியுமா!!! ■

---

ஸ்ரீ ஹரி:

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், சென்னை - 600 083.

மதுரமுரளி வருடசந்தா

வருட சந்தா - உள்நாடு **Rs.** 60/- வெளிநாடு **Rs.** 300/-

''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDஆக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. V. சங்கரன், மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078.
Phone : 4714327



ஸமீபத்தில் சென்னை ப்ரேமிகபவனத்தில் நடைபெற்ற
கல்வைத்த வாரம் நிகழ்ச்சி



சென்னை ப்ரேமிகபவனத்தில் ''த்வி ஸஹஸ்ரவதானி''
நாகபணி அவர்களின் ''அஷ்டாவதானம்'' நிகழ்ச்சி

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

*Regd. Office :* ப்ரேமிக பவனம், 24, நேதாஜி நகர்,
ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரின் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சென்ற விஜயதசமி அன்று துவக்கப்பட்டது. அதன் கேந்த்ரா கிளைகள் கீழ்கண்ட இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த கேந்த்ரா கிளைகளில் தினமும் கீழ்கண்ட நேரப்படி நாமஸங்கீர்த்தனம்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

நடைபெறுகின்றது.

| கிளை எண் | நாமசேகரர் பெயர் | முகவரி | தினமும் | ஞாயிற்றுக் கிழமை |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கு. ராமநாதன் -: 2412679 | 13, பட்டேல் தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை - 600 044 | காலை 6-8<br>மாலை 7-9 | காலை 6-10<br>மாலை 3-6 |
| 2. | ஸ்ரீ ந. ஜெயராமன் -: 2420599 | ‘‘குரு க்ருபா’’ ப்ளாட் நெ.12, ஹிந்து காலனி, 2வது மெயின்ரோடு உள்ளகரம், சென்னை - 600 091 | மாலை 5-7 | காலை 8-10<br>மாலை 4-6 |
| 3. | ஸ்ரீ க.ந. ஸாம்பஶிவம் -: 5514467 | 87, பெரம்பூர் நெடுஞ்சாலைரோடு, பெரம்பூர், சென்னை - 600 011 | காலை 8-9<br>மாலை 7-8 | காலை 7-10<br>மாலை 4-7 |

| கிளை எண் | நாமசேகரர் பெயர் | முகவரி | தினமும் | ஞாயிற்றுக் கிழமை |
|---|---|---|---|---|
| 4. | ஸ்ரீ ஙு. பிச்சை -: 2384509 | 3, சோமசுந்தரம் நகர் முதல் தெரு, பல்லாவரம் சென்னை - 600 043 | காலை 9-10 மாலை 6-7 | காலை 7-9 மாலை 3-5 |
| 5. | ஸ்ரீ கீ. வெங்கட்ராமன் -: 04182-20845 | 3/81, அதியமான் தெரு, நரஸிம்ம நகர் செய்யார் - 604 407 | காலை 7-8 மாலை 7-8 | காலை 6-9 மாலை 3-5 |
| 6. | ஸ்ரீ மீ. சந்திரசேகரன் -: 6247849 | குஏ 48/2, திரிவேணி குடியிருப்பு வெங்கடராமன் நகர், கொரட்டூர் சென்னை - 600 080 | மாலை 5-7 | காலை 8-10 மாலை 4-6 |
| 7. | ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் -: 6385394 | பாகவதபவனம், 422, off. 4வது குறுக்குத்தெரு பூம்பொழில் நகர், 50அடி ரோடு, ஆவடி, சென்னை | காலை 7-8 மாலை 6-7 | காலை 7-9 மாலை 3-5 |

இந்த கேந்த்ரா கிளைகளில் நடைபெறும் நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபைக்கு பாத்திரமாகி ஸகல நன்மைகளையும் அடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட கேந்த்ரா கிளைகளில் பிடியரிசி சேகரம் செய்யப்படுகிறது. தினந்தோறும் பக்தர்கள் தங்கள் வீடுகளில் ஒரு பிடி அரிசியை பிடியரிசி பாத்திரத்தில் போட்டு மாதம் ஒருமுறை அவற்றை கேந்த்ரா கிளைகளில் கொடுக்கலாம். இவ்வாறு சேகரிக்கப்படும் அக்ஷதையானது வேதபாடசாலைகளுக்கும் பகவந்நாம கீர்த்தனம் செய்யும் பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கும் அன்னதானம் செய்வதற்கு பயன்படுத்தப்படும்.

பக்தர்கள் இந்த கைங்கர்யத்திலும் பங்கேற்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

Sri Hari

# POOJYASRI MURALIDHARA SWAMIGAL'S CHAITANYA MAHAPRABHU NAMA BHIKSHA KENDRA

*Regd Office :* Premika Bhavanam,
24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083.

## MESSAGE

To those who are all joining Hari Nama Sankeerthanam of this Kendra Branches with sincere devotion and dedication, **SRI MURALIDHARA SWAMIGAL** assures that Lord Sri Krishna will take care of them and guide them in every walk of life. This is enough for their life time.

From a worm to Lord Brahma, all face problems for food, shelter, health, money, power, etc., and find no peace. Only the chanting of :

**HARE RAMA HARE RAMA RAMA RAMA HARE HARE**
**HARE KRISHNA HARE KRISHNA KRISHNA KRISHNA HARE HARE**

can help feel peace.

Chant "Hare Rama....." always. "Hare Rama....." will do miracles internally and externally.

You need not bother about any philosophy. Chanting "Hare Rama..." is more than enough. This will certainly lead you to the Truth.

Radhe Krishna



விஜயதஶமி அன்று துவக்கப்பட்ட
ஸ்ரீ ஸ்வாமிகளின் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

# எந்தரோ மஹானுபாவுலு - 19

ஸ்ரீராமானுஜரது ப்ரபாவத்தை எழுதினாலும் எழுத முடியும், ஆனால் அவரைச் சூழ்ந்திருந்த அவரது ஶிஷ்யர்களது ப்ரபாவத்தை எழுதுவது மிகவும் கடினம். மிகவும் உயர்ந்த ப்ரபாவம் வாய்ந்த ஆசார்யருக்கு உத்தம ஶிஷ்யர்கள் அமைவதால் பரஸ்பரம் இருவர்களுக்குமே கீர்த்தியும் பெருமையும் சேருகிறது. இதுவும் ஸ்ரீமந் நாராயணனின் லீலைதானே! சிந்தனைக்கு அப்பாற்பட்ட த்யாக புத்தியும், வேதங்களால் கூட விவரிக்க முடியாத உயர்ந்த ஞானமும், ஆசார்யனை விட வேறு தெய்வமில்லை என்ற திட விஶ்வாசமும், தெளிவான அறிவையும் ராமானுஜரது சீடர்கள் பெற்றிருந்தார்கள். ஒரு தீபத்திலிருந்து பல அகல் விளக்குகள் ஏற்றப்படுவதுபோல், ஸ்ரீராமானுஜனென்னும் ஒரு தீபத்திலிருந்து ஏற்றப்பட்ட அகல் விளக்குகளான ஶிஷ்யர்கள், பேரறிவையும், ஞானத்தையும் பெற்றிருந்தனர். அவர்களுக்கு ராமானுஜரது திருவடியைத்தவிர வேறு சிந்தனை கிடையாது.

ஸ்ரீராமானுஜரது கோஷ்டியில் யாவரும் ஸமம்தான் என்றாலும் ஶாஸ்த்ர ஞானத்தாலும், அனுஷ்டான க்ரமத்தாலும் கூரத்தாழ்வாரே முதல்வர் என கருதப்பட்டார். அவரை **பஞ்சகால பராயணர்** என்று குருபரம்பரை என்ற க்ரந்தம் கூறுகிறது. அவர், தமது அன்றாட வாழ்க்கையை ஐந்து விதமாகப் பிரித்துக்கொண்டார். விடியற்காலம், நீராட்டம், நியம நிஷ்டைகள், ப்ரார்த்தனைக்கு ஒதுக்கப்பட்டது. அடுத்து உபாதானத்துக்கு கிளம்பி ஆசாரமும், தூய்மையும் நிறைந்த இல்லங்களில் மட்டும் பிக்ஷை எடுத்து நாளின் இரண்டாவது பகுதியை முடிப்பார். தான் உபாதானம் எடுத்து வந்ததை அதிதிகளுக்கு இட்ட பிறகுதான், அவர் உணவு உண்பார். இப்படி மூன்றாவதாக அதிதி ஸத்கர்மா முடிந்த பிறகு பிற்பகலை வேத ப்ரபந்தங்களை ஓதுவதில் கழிப்பார். ஐந்தாவதாக இரவில், நாளை நன்னாளாக இருக்க பகவானைத் துதித்துவிட்டு நித்திரைக்கு செல்வார்.

இப்படி ஐந்து காலக்ரமங்களை ஏற்படுத்திக்கொண்டு இல்லறத்தில் இருந்தும் மஹாஞானியாக வாழ்க்கை நடத்தி வந்தார். அவரது மனைவியான ஆண்டாளும் பர்த்தாவுக்கு ஏற்ற பதிவ்ரதையாய் இருந்தாள். வீட்டில் தெய்வீகம் தென்றலாய் வீசியது.

இப்படிப்பட்ட தெய்வீக வாழ்க்கையிலும் ஒரு ஸமயம் தடை

ஏற்பட்டது. ஒருநாள் மழை அதிகமாக இருந்ததால், ஆழ்வாரால் உஞ்சவிருத்திக்கு செல்ல இயலவில்லை. அன்று வீட்டில் அடுப்பு புகையவில்லை. கணவன், மனைவி இருவரும் உபவாசமிருக்க நேர்ந்தது. ஆண்டாளுக்குத் தான் பட்டினி கிடப்பதைவிட, தன் உத்தமமான கணவன் பட்டினி கிடப்பது பற்றி தாங்க முடியாத துயரம் ஏற்பட்டது.

அன்று இரவு, நள்ளிரவு ப்ரஸாத நிவேதனங்களுக்கான முரசுகள் ஒலிக்க, ஸ்ரீரங்கநாதனுக்கு நிவேதனம் நடக்கும் ஸமயத்தில், அந்த ஒலி கேட்டு ஆண்டாள், அமைதியாக உறங்கும் தன் கணவனைப் பார்த்து பொறுக்கமுடியாமல் தனக்குள், ''பெருமாளே! உன்னையே கதியாக கொண்டிருக்கும் அடியர், பட்டினியுடன் உறங்குகிறார். உமக்கு மட்டும் குதூகலமான சாப்பாடு கிடைக்கிறது. உமக்கென்ன, நீர் உபாதானத்துக்கு செல்கிறீரா என்ன? இருந்த இடத்திலேயே யார் சாப்பிட்டாலும், சாப்பிடா விட்டாலும் வேளை தவறாமல் உணவு கிடைத்து விடுகிறது'' என்று, அந்த மகாபதிவிரதை மனதுக்குள் நினைத்துக்கொண்டாள். ஆடு, மாடுகளை உடையவர்கள் கூட, அவற்றுக்குத் தீனி போட்டு பராமரிக்கிறார்கள். ஸ்ரீரங்கநாதன் தன்னை சார்ந்தவர்களுக்கு என்ன செய்கிறார்? என்று கேள்வி கேட்டுக்கொண்டு படுத்திருந்தாள்.

இந்த மனக்குமுறல் ஸ்ரீரங்கநாதன் காதில் நன்றாக விழுந்தது. உடனே திருமடப்பள்ளி தலைவரான உத்தம நம்பியின் கனவில் தோன்றி, ''நமது ஆழ்வான் பட்டினி கிடக்கிறான். எமக்கு ஸமர்ப்பித்த ப்ரஸாதத்தை நீர் தலையில் சுமந்துகொண்டு எனக்கு அளிக்கும் மரியாதையுடன் அவனுக்குக் கொடுத்துவிட்டு வாரும்'' என்று உத்தரவிட்டார். உத்தமநம்பியும் உடனே கொட்டு மேளத்துடன் ப்ரஸாதத்தை தலையில் சுமந்துகொண்டு ஆழ்வான் இல்லம் சென்றார். வாயிலில் மேள சத்தம் கேட்டு பெருமாள் எழுந்தருளுகிறார் என்று ஆழ்வார் உறக்கம் கலைந்து அவசரமாக வெளியே வந்தார். உத்தம நம்பி தலையிலிருந்து ப்ரஸாதத்தை இறக்கி, ''பெருமாள் தேவரீருக்கு இதைக் கொடுத்து வரக் கட்டளை இட்டார்'' எனக் கூறி உள்ளே ப்ரஸாதத்தை வைத்தார்.

ஆழ்வார் ஒன்றும் புரியாமல் திகைத்தார். ''பெருமாளை நான் ப்ரஸாதம் கேட்கவில்லையே'' என்று தமக்குள் சொல்லிக்கொண்டு தமக்கு வேண்டிய இரண்டு திரள் ப்ரஸாதத்தை எடுத்துக் கொண்டு, மீதியைத் திருப்பி அனுப்பிவிட்டார். ஆண்டாளிடம், ''நீ பெருமாளிடம் ஏதாவது கேட்டாயா?'' என்று வினவ, அவள், ''நான் எதுவும் கேட்கவில்லை.


நள்ளிரவு ப்ரஸாத முரசுகள் கேட்டதும், அடியவர் பட்டினியுடன் படுத்திருக்கும்பொழுது பெருமாள் கோலாகலமாக அமுது செய்கிறாரே என்று மனத்துள் நினைத்தேன்'' என்றாள்.

ஆழ்வான், எல்லாம் அவன் ஸங்கல்பம் என்று நினைத்து ப்ரஸாதத்தை தாமும் உண்டு பத்தினிக்கும் அளித்தார். காலக்ரமத்தில் அந்த இரண்டு திரள் ப்ரஸாதங்கள் ஆழ்வான் குடும்ப வாழ்க்கையில் விசித்திரத்தை விளைவித்தன. இரண்டு திரள் ப்ரஸாதத்துக்கு பராஶரன், வியாஸன் என்ற இரு பெரும் மேதைகளை ஆண்டாள் பெற்றெடுத்தாள். அந்த மஹாபதிவ்ரதையின் வயிற்றில் எம்பெருமான் அவதாரம் எடுத்தது போல ஸ்ரீரங்கநாதனே பராஶர, வேதவ்யாஸ பேரொளியாகத் தோன்றினார். இவ்விரு மேதைகளால் வைஷ்ணவ ஸமயம் ஒளி வீசித் திகழ்ந்தது. பராசரபட்டர் குழந்தையிலேயே மஹாஞானியாகத் திகழ்ந்தார். அவரது அபார அறிவு ஸகல ஶாஸ்த்ர விற்பன்னர்களையும், ஏன், அவரது தந்தையான கூரத்தாழ்வானையுமே திணற அடித்தது என்றால் மிகையாகாது.

மஹாமேதையாக பராஶரன் பிறந்தபோதும், கூரத்தாழ்வான் புத்திரவாஞ்சையை அதிகமாகக் காட்டாமல், உடையவர் இருக்கிறார், பார்த்துக்கொள்வார் என்று இருந்துவிட்டார். ராமானுஜர், குழந்தையை தன்னிடம் கொண்டு வருமாறு எம்பாரிடம் பணித்துக் குழந்தையின் மகாதேஜஸ்ஸினால் கவரப்பட்டு வியந்து, குழந்தையின் ஆன்மீக அப்யாஸத்தை கவனிக்க எம்பாருக்கு உத்தரவிட்டு பராஶரன் என்ற திருநாமம் சூட்டினார். இதனால் ஆளவந்தாருக்கு அளித்த இரண்டாவது ஸத்தியத்தையும் நிறைவேற்றினார். இளைய குழந்தைக்கு வ்யாஸபட்டர் என்ற பெயரையும் வைத்தார்.

பராஶரபட்டருக்கு ஐந்து வயதாக இருக்கையில், அனைவரையும் வெற்றி கொள்ளும் புலவரான ஸர்வஜ்ஞபட்டர் என்பவர் ஒரு நாள் தம் ஶிஷ்யர்கள் பலருடன், தம் விருதுகளை தம்பட்டம் அடித்துக்கொண்டு பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது வீதியில் விளையாடிக் கொண்டிருந்த பராஶரபட்டர் சிரித்துக்கொண்டே கைநிறைய புழுதியை எடுத்துக்கொண்டு ஸர்வஜ்ஞ பட்டரின் முன்னால் சென்று, ''பெரியவரே! என் கையில் எவ்வளவு மண் இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்க்கலாம். நீர் ஸர்வஜ்ஞரானால் இதற்கு விடையளியுங்கள்'' என்றார்.

திடீரென்று ஒரு சிறுவன் இப்படிக் கேட்டதும் ஸர்வஜ்ஞர் ப்ரமித்துப்



போனார். உடனே அவர் தமது கர்வத்தை விடுத்து, அந்தக் குழந்தையை மடியில் வைத்து முத்தமிட்டு, ''குழந்தாய்! நீ சாதாரணமான குழுந்தை அல்ல. உன் கேள்வியால் எனக்கு புத்தி வந்தது. நீயே என் குரு'' என கொண்டாடிக் கொண்டே ஆழ்வான் இல்லம் சென்றார்.

இதற்குப் பிறகு பராஶரபட்டரை வேதபாடசாலையில் சேர்த்து விட்டனர். ஆனால், அவர் ஓரிரு நாட்களுக்குப் பிறகு அவர் பள்ளிக்குச் செல்லவில்லை. காரணம் கேட்டதற்கு பராஶரர் ''அங்கு சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுங்கள் என்கிறார்கள்'' என்று கூறினார். நேற்று வரை சொன்னது உனக்கு நன்றாகத் தெரியுமா என்று தந்தை கேட்டார். உடனே கடகடவென வேத பாடங்களை வரி தப்பாமல் ஒப்புவித்தார். ஆழ்வார் ப்ரமித்து, இனி இவனை பள்ளிக்கு அனுப்புவது பிசகு என்றுணர்ந்து, எம்பாரும், தானுமே ஆசிரியப் பொறுப்பை ஏற்கலாம் என முடிவு செய்தனர்.

ஒவ்வொரு ஆண்டிலும் பராஶரபட்டரது அறிவும் மேதாவிலாசமும் வளர்ந்து, ஶாஸ்த்ர ஞானத்தில் இணையற்றவராக அறிவழகும், உடலழகும் பெற்று ஒப்பற்ற இளைஞராக விளங்கினார். வாலிப வயதிலேயே மிக அருமையாக காலக்ஷேபங்கள் செய்துவந்தார். அவரது உபன்யாஸத்தைக் கேட்ட ஸ்ரீராமானுஜர் அவருக்கு வேதாந்தகார்யர் என்ற விருதை அளித்து மகிழ்ந்தார். அவருக்கு உரிய காலத்தில் திருமணமாகாததை எண்ணி தாய் ஆண்டாள் வ்யாகூலப்பட்டாள்.

ஆழ்வார் இதைப் பற்றி பெருமாளிடம் விண்ணப்பிக்க அன்றிரவே ஸ்ரீரங்கநாதன் பெரியநம்பி குடும்பத்தாரின் கனவில் தோன்றி ஆழ்வான் பிள்ளைக்கு பெண் கொடுக்குமாறு உத்தரவிட, மறுநாளே பராஶரருக்கு கிராக்கி மிக அதிகமாகி பெரியநம்பி வட்டாரங்கள் போட்டி போட்டுக் கொண்டு பெண் கொடுக்க முன்வந்தனர். அவர்களில் ஒரு பெண்ணை மணந்து க்ரஹஸ்தாஶ்ரமத்திலும், க்ரந்த காலக்ஷேமாதிகளிலும் சிறந்த ஒரு லக்ஷிய புருஷராக திகழ்ந்தார். இப்படிப்பட்ட மேதையை அடைந்த ஸ்ரீவைஷ்ணவ தர்ஶனத்தின் பேற்றை எண்ணி ஸ்ரீராமானுஜர் பேரானந்தம் அடைந்தார்.

ஸ்ரீராமானுஜரது ஸித்தாந்தம் துரிதமாக எங்கும் பரவி ஏழை எளியவர், பணக்காரர் என்ற உயர்வு தாழ்வு இல்லாமல் அனைவரையும் ஸ்ரீ வைஷ்ணவம் என்கிற ஜோதியில் ஈடுபடுத்திக்கொண்டிருந்த

ஸமயத்தில் கங்கைகொண்டசோழபுரத்து சோழ மன்னன் ஸ்ரீ வைஷ்ணவத்துக்கு ஒரு எதிரியாக முளைத்தான். அவன் சிவபக்தன். ராமானுஜரது மதம் எங்கும் பரவுவதைக் கண்ட சோழ மன்னன் சைவ மதத்தை தனது அரசாங்க மதமாக்கினான். இத்துடன் நில்லாமல், 'சிவனே உயர் தெய்வம்' என எழுதி ப்ரமுகர்களிடம் கையெழுத்து வாங்கிவர ராஜ்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டான். சிலர் அரசனுக்கு பயந்து அப்படியே கையெழுத்துப் போட்டுத் தந்தனர்.

வைஷ்ணவ சிங்கங்களான ஸ்ரீ ராமானுஜரும், கூரத்தாழ்வானும் கையெழுத்து இட்டால்தான் தனக்கு வெற்றி என எண்ணி, ஸ்ரீராமானுஜரை கைப்பிடியாகக் கொண்டுவர ராஜஸேவகர்களுக்கு உத்தரவிட்டான். மடத்துக்கு வந்த ராஜாங்க ஸேவகர்கள், ராமானுஜர் எங்கே? என கேட்க, பணி மக்களில் ஒருவன், எதற்கு ராமானுஜர்? என்று கேட்டனர். அரசாங்க உத்தரவு பற்றி சேவகர்கள் சொன்னதும், பணிமகன் உள்ளே சென்று ரகசியமாக ஆழ்வாரிடம் விஷயத்தை தெரிவித்தான். மஹாபுத்திசாலியான ஆழ்வா, அரசாங்க உத்தரவின் காரணத்தை நொடியில் ஊகித்துக் கொண்டு, ராமானுஜரது காஷாயத்தையும், த்ரிதண்டத்தையும் தாமே தரித்துக் கொண்டு, ராஜ சேவகர்களுடன் சென்றார். இதைக் கண்டதும் அவருடன் பெரியநம்பியும் சென்றார். நீராட்டத்துக்குப் போயிருந்த ராமானுஜர் மடத்துக்கு வந்து தனது த்ரிதண்ட காஷாயாதிகளைக் கேட்டதும், அடியார்கள் விஷயத்தை ராமானுஜரிடம் தெரிவித்தனர். இதைக் கேட்ட ராமானுஜர் கவலைப்பட்டு என்னால் ஆழ்வானுக்கும், பெரியநம்பிக்கும் இந்தத் தீமை ஏற்பட வேண்டுமா? என வருந்தினார்.

பிறகு சிந்தித்துவிட்டு ஆழ்வானுடைய உடைகளை கேட்டு வாங்கி அணிந்துகொண்டார். அடியார்கள் ராமானுஜரிடம், ''ஆழ்வானும், பெரிய நம்பியும் தீங்கின்றி திரும்புவார்கள். தாங்கள்தான் ஸ்ரீவைஷ்ணவத்தின் ஆணிவேர். எனவே தங்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படாமல் இருக்க தயவு செய்து தேவரீர் இங்கிருந்து தப்பிச் செல்லவேண்டும். மதத்தை உத்தேசித்து தாங்கள் இதைச் செய்யவேண்டும்'' என வலியுறுத்தினார்கள். மிகுந்த க்லேசத்துடன், ''எம்பெருமான் திருவுள்ளப்படிதான் எல்லாம் நடக்கும். இதுவே அவன் கட்டளை. அதனால் நான் செல்கிறேன்'' என்று தமது சில சீடர்களுடன் மேல்திசை நோக்கிப் பயணமானார்.

தமது வீரர்கள் அழைத்து வந்தது ஸ்ரீராமானுஜரல்ல என்று சோழ மன்னன் எளிதில் உணர்ந்து கொண்டான். மறுபடி அவர்களை ராமானுஜரை பிடித்து வர அனுப்பினான். அதற்குள் ராமானுஜர் ஊரைவிட்டு வெகுதூரம் சென்றிருந்ததால், அவர்கள் முயற்சி ஈடேறவில்லை.

ராஜசபைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கூரத்தாழ்வானைக் கண்டதும் சோழ அரசன், ''ராமானுஜரே! சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை என எழுதிக் கையொப்பம் இடும்'' என்று ஆணைபிறப்பித்தான். 'சிவாத் பரதரம் நாஸ்தி' என எழுதி கையெழுத்திடச் சொன்னதைக் கேட்டு கூரத்தாழ்வானுடைய கூர்மையான அறிவில் பளிச்சென ஒரு மின்னல் தோன்றியது.

உடனே ''த்ரோணம் அஸ்தி தத: பரம்'' என எழுதிவிட்டார். அதாவது சிவம் என்றால் ''குறுணி'' என்றொரு அளவாகும். ''த்ரோணம்'' என்றால் ''பதக்கு'' என்று அதைவிட பெரிய ஓர் அளவாகும். இதைக் குறித்து குறுணியைக் காட்டிலும் பதக்கு பெரியது என்று பொருள்பட இப்படி எழுதிவிட்டார். மேலும் த்ரோணம் என்றால் தும்பை மலர் என்றும் பொருள் உண்டு. மனமுருகி தும்பை மலரால் அர்ச்சித்து வழிபட்டால் சிவபெருமான் கனிந்து அருளுவதால் சிவனைவிட தும்பைமலர் பெரியது என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால், சோழ மன்னன் முதலில் கூறிய பரிகாசப் பொருளையே எடுத்துக்கொண்டு வெகுண்டு இவ்விருவர் கண்களையும் பிடுங்கிவிடுங்கள் என ஆணையிட்டான்.

சேவகர்கள் முதலில் பெரியநம்பியை அரண்மனையின் கொல்லைப் புறத்திற்கு அழைத்துச் சென்றனர். சிறிது நேரத்தில், அங்கிருந்து பெருங் கூக்குரல் கேட்டது. பிறகு உள்ளே வந்த ராஜசேவகர்களிடம் அரசன், ''அந்த வைஷ்ணவப் புழுவை அழித்தீர்களா?'' என்று கேட்டான். கூரத்தாழ்வான் சீறி எழுந்து, ''பாதகா ! பெரியநம்பிகளை என்ன செய்தாய்? அந்தப் பரம பாகவதருக்கு நீ செய்த தீங்கு உன்னை அழிக்கும். புழுக்களைப் பற்றி கூடிய விரைவில் தெரிந்து கொள்வாய்'' என இரைந்துவிட்டு பின்புறம் ஓடினார். அங்கே கண்கள் பிடுங்கப்பட்டு, பெரிய நம்பி ரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டு எதற்கும் கலங்காத கூரத்தாழ்வான் நிதானம் இழந்து, ''இதென்ன அநியாயம்! இதென்ன அநியாயம்!!'' எனக் கூறினார்.

மண்டபத்தின் தூண்களும் சுவர்களும் இதையே எதிரொலித்தன. இந்த எதிரொலியால் அரசனே நடுங்கினான். உள்ளே வந்த ஆழ்வான் ''உன்னைப் போன்ற பாதகனைப் பார்த்த இந்த ஊனக்கண்களை நாங்கள்

அல்லவா பிடுங்கி எறியவேண்டும்'' எனக் கூறி தன் கைவிரல்களாலேயே தன் கண்களிரண்டையும் பிடுங்கி மன்னன் முன் எறிந்தார். அரசனும் ஸபையும் இந்த தீரச் செயலைக் கண்டு நடுங்கினர்.

இதற்குள் பெரியநம்பியின் ஆவி பிரிந்து கொண்டிருந்தது. அங்கு சென்ற கூரத்தாழ்வான் மடியில் தலையையும், தன்மகள் அத்துழாயின் மடியில் காலை நீட்டியும் தமது ஆசார்யனின் திருவடிகளை த்யானித்துக் கொண்டு ப்ராணனை இழந்தார் பெரியநம்பி. கூரத்தாழ்வார் கதறினார். வைஷ்ணவ தர்ஶனத்திற்காக தனது தர்ஶனத்தையே இழந்த கூரத்தாழ்வான், உயிரையும் இழந்த பெரியநம்பி ஆகியோரின் மேன்மையை வார்த்தையால் அளவிட்டு சொல்ல முடியுமா? பெரியநம்பியையும் இழந்து, ராமானுஜரையும் பிரிந்து ஸ்ரீரங்கத்தில் வசிக்க மனமில்லாமல் கூரத்தாழ்வான் திருமாலிருஞ்சோலைக்குச் சென்றுவிட்டார்.

சோழனிடமிருந்து தப்பிய ராமானுஜர், மேலக்கோட்டை என்கிற திருநாராயணபுரத்தை காடு திருத்தி நாடாக்கி அங்கு திருநாராயணன் கோயிலையும் புதுப்பித்து அங்கேயே வாழ்ந்துகொண்டிருந்தார். தமக்குப் பதிலாக ராஜஸபைக்கு சென்ற கூரத்தாழ்வானும், பெரியநம்பியும் என்ன ஆனார்களோ என்று வ்யாகூலப்பட்டுக் கொண்டிருந்தபோது ஸ்ரீரங்கத்திலிருந்து ஒரு வைஷ்ணவர் திருநாராயணபுரம் வந்தார். அவரிடம் ராமானுஜரே கூரத்தாழ்வான், பெரியநம்பி இருவரைப் பற்றி விசாரிக்க, அவர் மேற்கூறிய எல்லா விவரங்களும் கூறினார். இதைக் கேட்ட ராமானுஜர் பெரிதும் இடிந்து போனார். தமது சீடர்களில் ஒருவரை கூரத்தாழ்வானிடம் அனுப்பித் தமது வருத்தத்தை தெரிவிக்குமாறு பணித்தார். அவரிடம், ''உலகுக்கெல்லாம் ஆசாரியரான எம்பெருமானார் சுகமாக வாழ்ந்தால் அதுவே எனக்குப் போதும்'' என்று கூரத்தாழ்வான் கூறினார்.

இதனிடையில் சோழ அரசனுக்கு திடீரென கழுத்தில் ஓர் புண் உண்டாயிற்று. அதிலிருந்து ஏராளமான புழுக்கள் உண்டாயின. ''விரைவில் புழுக்களைப் பற்றி தெரிந்து கொள்வாய்'' என கூரத்தாழ்வான் இட்ட ஶாபம் பலித்துவிட்டது. மஹான்கள் வாக்கு எப்போதும் பொய்க்காது அல்லவா? போதாக்குறைக்கு அரசனுக்கு கடுமையான வயிற்றுவலியும் வந்து இரவோடு இரவாக துடிதுடித்துச் செத்தான். கழுத்திலே புழுத்து மாண்டதால் ''கிருமிகண்டன்'' என பெயர் பெற்றான் அந்த சோழ அரசன்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 52

### சகலமும் விழுங்கும் கதிரொளியினமன
### சலச மலர்த்தியிடு அருணாசலா

ரமண மஹரிஷிகள் திருச்சுழியிலிருந்து கிளம்பி திருவண்ணாமலை வந்து சேர்ந்த பின்னர், அவரது தாயார், ரமணர் திருவண்ணாமலையிலிருப்பது அறிந்து, அவரைப் பார்க்க நேரில் வருகின்றார்கள். பகவானை நேரில் பார்த்து கதறி அழுகிறாள். ''குழந்தை, நீ தியானம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டால், நமது வீட்டிலேயே வந்து தியானம் செய். நாங்கள் உனக்கு தொந்தரவாக இருக்க மாட்டோம். உன்னை இந்த தபஸ்விகளின் கோலத்தில் பார்த்தால் எனக்கு வயிறு பற்றி எரிகிறது'' என பலவிதமாக முறையிடுகிறாள். இவ்வாறு அவரது தாய் உருகி அழும்பொழுது கூட, பகவானின் மனதானது நிஶ்சலமாய் இருந்தது. அவர் ஏதும் பேசாமலேயே இருந்தார். இந்த மாத்ரு விரஹத்தை பார்த்த அருகிலிருந்தவர்களுக்கே மனம் உருகிவிட்டது. அவர்கள் பகவானிடம் ஏதாவது ஆறுதல் மொழி சொல்லுமாறு வேண்டினர். அதற்கு, ''ஆங்கிருந்தபடியே ப்ராரப்த கர்மத்தின்படி ஒருவன் ஆட்டுவிப்பதால், நடப்பது என்பது எத்துனை தடைகள் வரினும் நடந்தே தீரும். நடக்க ஒண்ணாதது எம்முயற்சிக்கினும் நடவாது. இதுவே திண்ணம். அமைதியாயிருப்பதே நலம்'' என எழுத்து மூலம் மறுமொழிந்தார்.

நமக்கு ஏற்படக்கூடிய ஸுகதுக்கங்களுக்கு ப்ராரப்தமே காரணம். முயற்சியின்றி ஒருவனுக்கு வீடு வாங்குவதோ, வேலை கிடைப்பதோ சாத்தியமோ எனில், ஒருவனுக்கு ஶரீரத்தில் வியாதி ஆசைப்படாமலே வந்துவிடுகிறது. வியாபாரத்தில் நஷ்டம் ஆசைப்படுவதனாலா வருகிறது? இல்லையே ஆனால் இவை போன்றவைகள் நடக்கத்தான் செய்கின்றன. கெடுதல் எவ்வாறு முயற்சியின்றி, ஆசைப்படாமல் நடக்கிறதோ, அதுபோல் நல்லதும் அங்ஙனமே நடக்கும்.

சரி, ப்ராரப்தமே சகலவிதமான நல்லது, கெடுதலுக்கும் மூலகாரணம் எனில் பாப, புண்ணியங்கள் எவ்வாறு ஒருவனுக்கு வரும். ஒருவன் மற்றொருவனை கொலை பண்ணிவிடுகிறான். பின்னவனுக்கு



முன்னவனால் கொலை பண்ணப்படவேண்டும் என்று விதி. முன்னவனுக்கோ பின்னவனை தனது கையால் கொல்ல வேண்டும் என்று விதி. விதிதான் காரணமெனில், கொலை செய்த குற்றத்திற்கு பாபம் எப்படி நேரும்?

காசி, கங்கை க்ஷேத்ராடனம், தீர்த்தயாத்திரை ஒருவர் செல்கிறார். வேத பாராயணம், யாக யஜ்ஞங்கள் எல்லாம் நடத்துகிறார். இவை புண்ணிய செயல்களே. இதுபோல் அவர் சில பாப காரியங்களும் செய்கிறார். இவை இரண்டும் அவருடைய தலைவிதிப்படியே நடக்கிறது. ஆனால் அவர் காசி கங்கையில் ஸ்நானம் செய்யும் காலத்தில், ''கங்கையில் ஸ்நானம் செய்வதற்கு எனது முயற்சி காரணமில்லை. எனது விதியே காரணம்'' என்று நினைத்து விட்டால், அங்கு செய்த புண்ணியம் அவரை ஒட்டாது. அல்லது ஈஶ்வரன்தான் என்னை கங்கையில் ஸ்நானம் செய்ய வைத்துள்ளான் என்று நினைத்து விட்டாலும் அவருக்கு புண்ணியம் ஒட்டாது. இது போலவே, பாப காரியங்களை செய்யும்பொழுது இதற்கு விதியோ அல்லது ஈஶ்வரனோதான் காரணம் என்று நினைத்து விட்டால், பாபமும் அவரை ஒட்டாது. மாறாக புண்ணியங்கள் நாம்தான் செய்கிறோம் என்றும், பாபத்தை ஈஶ்வரன்தான் செய்ய வைக்கிறான் என்று நினைத்து விட்டால் மிகவும் தவறு. அது ஆபத்தில் கொண்டு விடும்.

கிருஷ்ணனும் கீதையின் அர்ஜீனனிடம், ''நீ யுத்தம் செய். நீ ராஜா. நீ க்ஷத்ரியன். உனது தர்மம் யுத்தம் செய்வதே. ஆதலால் யுத்தம் செய்வதால், உனக்கு பாபம் ஒட்டாது'' என்கிறான். ஸர்வ சத்தியமாக ஸகலமும் நடப்பது பகவானின் சங்கல்பத்தினால்தான் என்று ஒருவன் நினைத்து வருவானேயாகில், அவனுக்கு பாப, புண்ணியங்கள் துளியும் ஒட்டாது.

எந்த காரியத்திற்கும் செய்துகொள்ளும் ஸங்கல்பத்தின்படி பலன் மாறுகிறது. ஒருவனால் ஒரு ஆட்டுக்குட்டி கொலை செய்யப்பட்டால் அவனுக்கு பாபம் வரும். ஆடும் நல்ல கதியை அடையாது. அதே ஆட்டுக் குட்டியை ஒரு பெரிய ஸோமயாகத்திலோ, வாஜபேய யாகத்திலோ பசுவாக கொடுத்தால், ஆட்டுக் குட்டிக்கும் சொர்க்கம். செய்து வைக்கும் யஷ்டாவிற்கும் சொர்க்கம். ஒரே கொலை. ஸாமான்யமாக செய்தால் பாபம். யாகத்திற்கு பயன்பட்டால் புண்யம். அதே ஆட்டுக்குட்டி ஒரு ஜீவன் முக்தரால் அறியாமல் கொலை செய்யப்பட்டு விடுமானால், அதற்கு மோக்ஷம். மேற்கூறப்பட்ட மூன்று காரியங்களும் கொலை என்பதே. பலனோ மூன்றிற்கும் வித்தியாசம்.

மேற்கூறியது அப்படியே ஸ்ரீஸமர்த்த ராமதாஸரின் சரித்திரத்தில் வருகிறது. ஒரு ஸமயம், அவர், பறந்து செல்லும் பக்ஷிகளை ஒவ்வொன்றாக அடித்து வீழ்த்தி, தனது பையில் போட்டுக் கொண்டு செல்கிறார். இதை நேரில் பார்த்த ப்ரஹ்மணர்கள் அவரிடம், ''உங்களை ஸகலரும் மஹான் என்று கூறுகின்றனரே. ஆனால் மிகவும் துஷ்ட ஸ்வபாவம் படைத்தவராகவும், மஹாபாபியாகவும் உள்ளீரே'' என்கின்றனர். ராமதாஸர் தாம் செய்த காரியத்திற்கு தகுந்த ப்ராயச்சித்தம் ஒன்று செய்து வைக்க அவர்களிடம் கேட்க, அவர்களும் ஒப்புக் கொள்கின்றனர். ராமதாஸரோ துறவி. தன்னிடம் தக்ஷிணை கொடுக்க ஏதுமில்லையே என்று ப்ராஹ்மணர்களிடம் கூற, அவர்கள், ''தங்களுடைய ஶிஷ்யன்தானே ராஜா சத்ரபதி சிவாஜி. ஒரு சீட்டு எழுதிக் கொடுத்தால் அவனிடம் வாங்கிக் கொள்கிறோம்'' என்று சொல்கின்றனர். ''சத்ரபதி சிவாஜி அவ்வாறு கூறிக்கொள்கிறார். ஆனால் எனக்கு அப்படி ஒரு 'பாவ'மில்லை'' என ராமதாஸர் கூறினாலும் ப்ராயச்சித்தம் பண்ணுதற்காக சீட்டு எழுதித் தர ஒப்புக் கொள்கிறார்.

ப்ராயச்சித்தம் செய்து வைத்த பின்னர், பாவம் போய் விட்டதா என கேட்டார் ராமதாஸர். பாபம் விலகியது என்றனர் ப்ராஹ்மணர்கள். ''அதற்கான அறிகுறி இல்லையே. பறவைகள் பறக்கவில்லையே'', என்றார் ராமதாஸர். ''பறவைகள் இனி பறவா. ஆனால் உங்களை ஒட்டியிருந்த பாபமானது விலகிற்று'' என்றனர் ப்ராஹ்மணர்கள். அவர்களெதிரே உடன், தனது பையிலிருந்து, அவர் ஒவ்வொரு பறவையாய் ''ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்'' என்று நாமகோஷத்துடன் வெளியே விட்டார். அனைத்தும் உயிர் பெற்று பறந்து போய்விட்டன. இந்த ப்ராயச்சித்தம் எவ்வாறு? என ராமதாஸர் வினவ, ப்ராஹ்மணர்களோ திகைத்துப் போயினர்.

மோக்ஷம் செல்ல பாப, புண்ணியங்கள் தேவை இல்லை. லௌகீகமான விஷயங்களுக்குத்தான் ப்ராரப்தம். ப்ராரப்தமான விஷயங்களில் 'நான்' என்கிற 'பாவத்தை வைத்தால்தான், பாப, புண்யங்கள் நம்மை ஒட்டும். 'நான்' என்கிற 'பாவ'த்தினால்தான் விஷய ஸம்பந்தம் ஏற்படுகிறது. இல்லாவிடில் பாப, புண்யங்கள் ஒருக்காலம் ஒட்டா. (தொடரும்)

---

பின் அட்டைப்படம் : உத்ஸவத்தின் விடையாற்றியன்று அவப்ருத ஸ்நாநம்.

# செய்திகள்

அக்டோபர் 31-ந் தேதி முதல் நவம்பர் 14-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் வர்தந்தி ட்ரஸ்ட் சார்பில் ஸ்ரீ க்ருஷ்ண யஜூர்வேத ஜடா பாராயண மஹோத்ஸவம் நம் ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது.

உத்ஸவ தினங்களில் தினமும் காலை 7 மணி முதல் பகல் 11 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் வேதபாராயணம் நடைபெற்றது.

நவம்பர் 7-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம் சென்னை ப்ரேமிக பவனத்தில் கொண்டாப்பட்டது.

நவம்பர் 13-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஜடாபாராயண மஹோத்ஸவத்தை ஒட்டி **''கல் வைத்த வாரம்''** நிகழ்ச்சி மாலை 3 மணி முதல் 7 மணி வரை நடைபெற்றது. இதில் அநேக வேத வித்வான்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் ஸன்மானங்கள் வழங்கினார்கள்.

அன்று இரவு **''த்வி ஸஹஸ்ராவதானி''** நாகபணி அவர்களின் **''அஷ்டாவதானம்''** நடைபெற்றது.

நவம்பர் 17-ந் தேதி

சென்னை பெசன்ட் நகரில் அருள்மிகு ரத்னகிரீஸ்வரர் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜடாபாராயணத்தில் நம் ஸ்வாமிகள் ஜடாபாராயணத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

நவம்பர் 19-ந் தேதி — ஏகாதஶீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஏகாதஶீ பஜனை நடைபெற்றது.

நவம்பர் 20-ந் தேதி — கைசிக த்வாதஶீ

நமது மிஷன் சார்பில் திருமழிசை ஸ்ரீ ஜகந்நாத பெருமாளுக்கு

சிறப்பு திருமஞ்சனம், ஆராதனை கட்டளை நடைபெற்றது.

அன்று மாலை சென்னை ப்ரேமிகபவனத்தில் அஷ்டபதி பஜனையும் துளஸீ கல்யாணமும் நடைபெற்றது.

நவம்பர் 23-ந் தேதி - விஷ்ணுதீபம்

மாலையில் சென்னை மயிலாப்பூர் ரமண கேந்த்ராவில் ஸ்ரீ ஸ்வாமிகள், ''அருணாசல மஹாத்மியம்'' பற்றி ப்ரவசனம் செய்தார்கள். சென்னை ப்ரேமிகபவனத்தில் தீபம் ஏற்றப்பட்டது. நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

டிசம்பர் 16-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் தனுர்மாத பூஜை ஆரம்பம் தனுர்மாத முப்பதுநாட்களும், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு திருமஞ்சனமும், பூஜையும், திருவாராதனமும் நடைபெறும்.

டிசம்பர் 16-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் மணிமண்டபத்தில் அத்யயன உத்ஸவம் நடைபெறும்.

டிசம்பர் 19-ந் தேதி

வைகுண்ட ஏகாதஸீ - பரமபதவாசல் திறப்பும், கருடஸேவையும் நடைபெறும்.

ஜனவரி 4,5,6 தேதிகள்

மும்பை, மாதுங்கா, South Indian Bajan Samajல் நடைபெறும் ப்ரஸ்தானத்ரய பாராயண ஸதஸில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

மங்களானி பவந்து

## 2000 வருடத்திய முக்கிய தினங்கள்

ஜனவரி 1 ஆங்கில புத்தாண்டு - ராதா கல்யாணம்
3 ஸ்ரீ மஹாபெரியவாள் ஆராதனை
11 கூடாரைவல்லி
14 போகிப்பண்டிகை
15 மகர ஸங்கராந்தி, பொங்கல் பண்டிகை -
உத்தராயண புண்யகாலம்
16 கணுப்பொங்கல்
17 உழவர் திருநாள்
25 திருவையாறு ஸ்ரீ தியாகராஜர் 153-ம் ஆண்டு
ஆராதனை
26 குடியரசு தினம்
பிப்ரவரி 5 தை அமாவாஸ்யை
12 ரதஸப்தமி
19 மாசி மகம் திருவிடந்தை க்ஷேத்ரத்தில் தீர்த்தவாரி
மார்ச் 4 மஹாசிவராத்ரி - வடவாம்பலம் ஸ்ரீ
ஆத்மபோதேந்தராள்
அதிஷ்டானத்தில் அபிஷேகம், பூஜை
8 ஸ்ரீ ராமக்ருஷ்ண ஜயந்தி
14 காரடையார் நோன்பு
19 ஹோலி பண்டிகை
20 பங்குனி உத்திரம் - திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன்
திருக்கல்யாண உத்ஸவம்
ஏப்ரல் 5 யுகாதி - தெலுங்கு வருடப்பிறப்பு
12 ஸ்ரீ ராமநவமி
13 தமிழ்வருடப்பிறப்பு - விஷுக்கனி
18 சித்ராபௌர்ணமி
மே 2 பகவான் ஸ்ரீ ரமணர் ஆராதனை
6 அக்ஷய த்ருதியை
8 ஸ்ரீ சங்கர ஜயந்தி
17 ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி
19 ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி
ஜூலை 7 ஆனி உத்திரம், நடராஜர் தர்சனம்
12 ஆஷாட ஏகாதஸீ
16 ஆடிப்பண்டிகை, வ்யாஸ பூஜை,

| | | |
|---|---|---|
| | | தக்ஷிணாயண புண்யகாலம் ஆரம்பம் |
| | 30 | ஆடி அமாவாஸ்யை |
| ஆகஸ்ட் | 2 | ஆடிப்பதினெட்டாம் பெருக்கு |
| | 3 | ஆடிப்பூரம் |
| | 11 | வரலக்ஷ்மி விரதம் |
| | 14 | ரக்ஷாபந்தன் |
| | 15 | ஆவணி அவிட்டம் |
| | 16 | காயத்ரி ஜபம் |
| | 22 | கோகுலாஷ்டமி - ஏழாம் ஆண்டு ப்ரஹ்மோத்ஸவம் ஆரம்பம் |
| | 23 | ஸ்ரீஜயந்தி |
| | 27 | கோவிந்த பட்டாபிஷேகம் |
| செப்டம்பர் | 1 | விநாயக சதுர்த்தி |
| | 2 | ரிஷி பஞ்சமி |
| | 5 | ராதாஷ்டமி |
| | 10 | வாமன ஜயந்தி, ஓணம் பண்டிகை |
| | 14 | மஹாளயபக்ஷம் ஆரம்பம் |
| | 25 | கோவிந்தபும் ஸ்ரீ பகவந்நாம போதேந்த்ராள் ஆராதனை |
| | 27 | மஹாளய அமாவாஸ்யை |
| | 28 | நவராத்ரி உத்ஸவம் ஆரம்பம் |
| அக்டோபர் | 6 | ஸரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை |
| | 7 | விஜய தஶமி |
| | 8 | ஶ்ரவணதீபம் - ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் அவதார உத்ஸவம் |
| | 17 | துலா ஸ்நானம் |
| | 26 | தீபாவளி பண்டிகை |
| | 27 | ஸ்ரீ ஸ்வாமிகளின் திருக்ஷேத்ரம் |
| நவம்பர் | 8 | கைஶிக த்வாதசி, திருமழிசை ஸ்ரீ ஜகந்நாத பெருமாள் கட்டளை |
| | 15 | குடமுழுக்கு |
| | 16 | முடவன் முழுக்கு |
| | 25 | திருவிசை நல்லூர் ஸ்ரீதர அய்யாவாள் கங்காகர்ஷணம் |
| டிசம்பர் | 8 | கைஶிக த்வாதசி |
| | 9 | அண்ணாமலை தீபம் |
| | 10 | விஷ்ணுதீபம் |
| | 16 | தனுர் மாத பூஜை ஆரம்பம் |
| | 25 | ஹனுமத் ஜயந்தி |

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/Chief PMG - 3/99
WPP No. TN/Chief PMG - 4/99

வேணு : 5 | டிசம்பர் 1999 | கானம் : 5





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar